## கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

# மக்கள் சாசனம்

**2010**

©
தமிழ்நாடு அரசு
2010

# தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

# மக்கள் சாசனம் 2010

இந்த உரிமை ஆவணம், கைவினைப் பொருட்களின் வளர்ச்சி, மேம்பாடு மற்றும் மக்கள் முன்னேற்றம் மற்றும் தமிழக கைவினைஞர்களின் நலம் காத்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகவும், ஒப்பிய பொறுப்பாகவும் கொண்டுள்ள தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் குறித்தான விவர அறிக்கையாகும்.

**குறிக்கோள்கள்**

1. கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்துதல்
2. கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல்
3. பயிற்சி
4. கைவினைஞர்களுக்குப் பாராட்டு
5. கைவினைஞர்களுக்கான நலத்திட்டங்கள்

## 1. கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்துதல்

பொதுமக்களுக்குத் தேவைப்படும், கைவினைஞர்கள் தயாரிக்கும் பல்வேறு வகையான கைத்திறப் பொருட்களை தனது 18 விற்பனை நிலையங்கள் வாயிலாகவும், மற்றும் உள்ளூர் பண்டிகைகள் மற்றும் முக்கிய தருணங்களை ஒட்டி நடத்தப்படும் பல்வேறு கண்காட்சிகளின் மூலமாகவும் விற்பனை செய்து வருகிறது. பூம்புகார் விற்பனை நிலையங்களின் முகவரியும் மற்றும் தொலைபேசி எண்களும் இணைப்பு 2ல் கொடுக்கப்பட்டுள்ளன.

கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் தமிழக கைவினைஞர் தனது பொருட்களை பூம்புகார் விற்பனை நிலையங்கள் மூலமாகவும் மற்றும் இக்கழகம் ஏற்பாடு செய்யும் பல்வேறு கண்காட்சிகளின் மூலமாகவும் விற்பனை செய்வதற்கான வாய்ப்பிற்காக, இணைப்பு 1 மற்றும் 2ல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அணுகலாம்.

விற்பனை நிலையங்கள் மற்றும் கண்காட்சிகள் மூலமாக கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதுடன், கைவினைஞர்கள் நுகர்வோரிடம் தங்களுடைய பொருட்களை நேரடியாக விற்பனை செய்வதற்கு வசதியாக இக்கழகம், தமிழ்நாட்டில்

மாமல்லபுரம் (சென்னைக்கு அருகில்) மற்றும் கன்னியாகுமரி ஆகிய இரண்டு இடங்களில் நிரந்தர கண்காட்சித் திடல்களை அமைக்க உத்தேசித்துள்ளது.

**2. கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல்**

இக்கழகம், பித்தளை விளக்குகள் தயாரித்தல், பஞ்சலோகச் சிலைகள் தயாரித்தல், கலைத்தட்டுகள் தயாரித்தல், மரச்சிற்பங்கள் மற்றும் கற்சிற்பங்கள் போன்ற கைத்திறத் தொழில்களில் உற்பத்தி நிலையங்களை நாச்சியார்கோவில், வாகைகுளம், சுவாமிமலை, மதுரை, தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் செயல்படுத்தி வருகிறது. உற்பத்தி நிலையங்களின் முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் இணைப்பு–3ல் கொடுக்கப்பட்டுள்ளன. கைவினைஞர்களுக்கு இந்த உற்பத்தி நிலையங்கள் மூலமாக வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகிறது. மேற்படி கைத்திறத் தொழில்களில் ஏதாவது ஒன்றில் வேலை வாய்ப்பு தேடும் கைவினைஞர்கள் இணைப்பு 1 மற்றும் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களை அணுகலாம்.

**3. பயிற்சி**

கைத்திறப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் பல்வேறு திறமைகளைப் பெறுவதற்காக இக்கழகம் பயிற்சிகளை ஏற்பாடு செய்கிறது. இத்தகைய திறமைகளைப் பெற ஆர்வமுள்ளவர்கள் காலமுறைதோறும் இக்கழகம் ஏற்பாடு செய்யும் பயிற்சிகளில் சேரலாம். இதன் மூலம் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்வதைத் தொழிலாகவும் மேற்கொள்ளலாம். பயிற்சி காலங்களில், பயிற்சி பெறுபவர்களுக்கு உதவித் தொகை இக்கழகம் வழங்கும்.

**4. கைவினைஞர்களுக்குப் பாராட்டு**

**(அ) தேசிய விருது மற்றும் பூம்புகார் மாநில விருது**

தமிழ்நாட்டில் இதுவரை 23 கைவினைஞர்களுக்கு தேசிய விருது அளிக்கப்பட்டுள்ளது. இந்த கைவினைஞர்கள் பஞ்சலோகச் சிற்பம், கற்சிற்பம், மரச்சிற்பம், கலம்காரி ஓவியம், கண்ணாடி ஓவியம், கோவில் நகைகள் மற்றும் கோரைப் பாய் நெசவு போன்ற கைத்திறத் தொழில்களில் ஈடுபட்டு வருபவராவர். இந்த விருதுடன் ரொக்கப் பரிசு ரூ.1.00 இலட்சமும், ஒரு தாமிரப் பத்திரமும் மற்றும் ஒரு பொன்னாடையும் வழங்கப்படுகிறது. இவ்விருது மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்படுகின்றது. மிகவும் திறமை

வாய்ந்த கைத்திறன் கொண்ட கைவினைஞர்களுக்காக தேசிய விருதைக் காட்டிலும் சிறந்த விருதாக **சில்ப் குரு** என்ற விருதினை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

தேசிய விருது வழங்கப்படுவதைப் போன்றே கைவினைஞர்களின் படைப்புத் திறனை வெளிப்படுத்தவும், அவர்களது சிறப்புத் திறமையை அங்கீகரிக்கவும், இந்நிறுவனம் ***பூம்புகார் மாநில விருதுப் போட்டி***யை ஆண்டுதோறும் நடத்திவருகிறது. வெற்றி பெற்றவர்களுக்கு பணப்பரிசாக ரூ.5,000/– மற்றும் 40 கிராம் எடையுள்ள வெள்ளிப்பதக்கமும் சான்றிதழும் அளிக்கப்பட்டு வந்தன. 2006–2007ம் ஆண்டு முதல் பணப்பரிசு ரூ.5,000/–லிருந்து ரூ.20,000/– ஆக உயர்த்தப்பட்டு முன்பு கொடுக்கப்பட்டுவந்த வெள்ளிப்பதக்கத்திற்கு பதிலாக 4 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் அளிக்கப்படுகின்றது. 2009–2010ம் ஆண்டு முதல் பூம்புகார் மாநில விருதின் ரொக்கப் பரிசு ரூ.20,000/–லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் 2007–2008 ஆம் ஆண்டிலிருந்து பரிசு பெறுவோரின் எண்ணிக்கை ஐந்திலிருந்து பத்தாக உயர்த்தப்பட்டுள்ளது.

சில்ப் குரு விருது, தேசிய விருது மற்றும் பூம்புகார் மாநில விருதுகளைப் பெற்ற கைவினைஞர்கள் 60 வயதினை பூர்த்தி செய்யும்போது மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

இது சம்பந்தமாக மேலும் விபரம் வேண்டுபவர்கள் இணைப்பு 1-ல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

## 5. கைவினைஞர்களுக்கான நலத்திட்டங்கள்

### (அ) கைத்திறத் தொழிலாளர்களுக்கான நலவாழ்வு காப்பீட்டுத் திட்டம்

கைத்திறத் தொழிலாளர்களுக்கு மருத்துவ காப்பீட்டு வசதியை ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன், “ராஜீவ் காந்தி கைவினைஞர்கள் நல வாழ்வு காப்பீட்டு” த் திட்டத்தினை மைய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதனால் ஒரு கைவினைஞரின் குடும்பத்தில் 4 நபர்கள் ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ.15,000/– வரை மருத்துவ உதவி பெற்றுக்கொள்ளலாம். மேலும் நாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் மருத்துவ சிகிச்சைக்கான தொகையினையும் அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தின்கீழ் 2009–2010 ஆம் ஆண்டு முதல், 10,000 கைத்திறத் தொழிலாளர்களுக்கு, தமது பங்காக அவர்களால் செலுத்தப்பட வேண்டிய காப்பீட்டு கட்டணத்தை, மாநில அரசே செலுத்துகின்றது. இத்திட்டம் 2010–2011ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**(ஆ) சுவாமிமலையில் மூலப்பொருள் வங்கி அமைத்தல்**

தமிழ்நாட்டில் பெருவாரியான கைவினைஞர்கள் பஞ்சலோகச் சிலை மற்றும் பித்தளை விளக்குகள் தயாரித்தல் ஆகிய பணிகளில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள சுவாமிமலை மற்றும் நாச்சியார்கோயிலில் முறையே ஈடுபட்டு வருகின்றனர். இக்கைத்திறத் தொழில்களுக்கு தேவைப்படும் முக்கியமான மூலப் பொருட்கள் பித்தளை, செம்பு, துத்தநாகம், காரீயம் மற்றும் வெள்ளீயம் ஆகும்.

தற்சமயம் கைவினைஞர்கள் தங்களுடைய மூலப் பொருள் தேவைப்பாட்டிற்கு இடைத்தரகர்களைச் சார்ந்து உள்ளனர். இத்தகைய இடைத்தரகர்கள் தாங்கள் கடனாக வழங்கும் மூலப் பொருட்களுக்கு மிகவும் அதிகமான அளவில் வட்டியை வசூலிக்கிறார்கள்.

பஞ்சலோகச் சிலை மற்றும் பித்தளைக் குத்துவிளக்குகள் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் கைவினைஞர்களுக்குத் தரமான மூலப்பொருட்களை நியாயமான விலையில் தங்குதடையின்றி வழங்கும் நோக்கத்துடன் இக்கழகம், சுவாமிமலையில் ஒரு மூலப் பொருள் வங்கியினை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் கைவினைப்பொருட்கள் அபிவிருத்தி ஆணையரிடமிருந்து நிதியுதவி பெறப்பட்டுள்ளது. சுவாமிமலையில் பூம்புகார் உற்பத்தி நிலையம் அமைந்துள்ள கட்டடத்தில் மூலப் பொருள் வங்கி அமைக்கப்படும். தமிழக வரலாற்றில் பெருமை பெற்று விளங்கிய சோழ சாம்ராஜ்யத்தில் பஞ்சலோகச் சிற்ப கைத்திறன், மன்னர்களால் ஆதரிக்கப்பட்டு தழைத்தோங்கியது. உத்தேசிக்கப்பட்டுள்ள மூலப் பொருள் வங்கியானது நமது மரபுரிமை உள்ள தொன்மையான பண்பாட்டினைப் பாதுகாக்க உதவும்.

கைவினைஞர்கள் தங்களுக்குத் தேவைப்படும் தரமான மூலப் பொருட்களை நியாயமான விலையில் கொள்முதல் செய்ய இந்த மூலப் பொருள் வங்கியினை பயன்படுத்திக் கொள்ளலாம். இதன் மூலம் இடைத்தரகர்களின் தொல்லையிலிருந்து விடுபட்டு கைவினைஞர்கள் தங்களது உற்பத்தித் திறனை மேம்படுத்திக் கொள்ளலாம். இதனால் அவர்களுடைய வருவாயும் அதிகரிக்கும்.

**(இ) தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நலவாரியம்**

தமிழக அரசு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களை தலைவராக நியமித்து, கைவினைத் தொழிலாளர் நல வாரியம் ஒன்றினை அமைத்துள்ளது. கைவினைத் தொழிலாளர்களின் நலனுக்காக இவ்வாரியத்தின் மூலம் கீழ்க்கண்ட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-

| வரிசை எண். | திட்டம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | விபத்து காப்பீடு திட்டம் | |
| | அ. விபத்து இறப்பு | 1,00,000 |
| | ஆ. விபத்து ஊனம் | ஊனத்தின் தன்மைக்கேற்ப |

| வரிசை எண். | திட்டம் | | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 2. | இயற்கை மரண உதவி | | 15,000 |
| 3. | ஈமச்சடங்கு உதவி | | 2,000 |
| 4. | கல்வி உதவித் தொகை | | |
| | அ. | 10ஆம் வகுப்பு படிப்பதற்கு<br>(பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000 |
| | ஆ. | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,000 |
| | இ. | 11ஆம் வகுப்பு படிப்பதற்கு<br>(பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000 |
| | ஈ. | 12ஆம் வகுப்பு படிப்பதற்கு<br>(பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,500 |
| | உ. | 12ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,500 |
| | ஊ | முறையான பட்டப்படிப்பு<br>விடுதியில் தங்கி படித்தால் | 1,500<br>1,750 |
| | எ. | முறையான பட்ட மேற்படிப்பு<br>விடுதியில் தங்கி படித்தால் | 2,000<br>3,000 |
| | ஏ. | தொழில் நுட்ப பட்டப்படிப்பு<br>விடுதியில் தங்கி படித்தால் | 2,000<br>4,000 |
| | ஐ. | தொழில் நுட்ப பட்ட மேற்படிப்பு<br>விடுதியில் தங்கி படித்தால் | 4,000<br>6,000 |
| | ஒ. | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு<br>விடுதியில் தங்கி படித்தால் | 1,000<br>1,200 |
| 5. | திருமண உதவி | | 2,000 |
| 6. | மகப்பேறு உதவி (பெண் தொழிலாளர்களுக்கு மட்டும்) | | 6,000 |
| 7. | கண்ணாடி வாங்கிட உதவி | | 500–க்கு மிகாமல் |
| 8. | ஒய்வூதியம் | | 400 |

கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்ய விரும்பும் கைவினைஞர்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழிலாளர் அலுவலரை (சமூக பாதுகாப்பு திட்டம்) அணுகலாம் அல்லது அருகில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையம், உற்பத்தி நிலையம் அல்லது தலைமை அலுவலகத்தை விவரங்களுக்காக தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாரியத்தில் இதுவரை **64,356** கைவினைஞர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். **19,459** கைவினைஞர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களின்கீழ் இதுவரை ரூ.**593.04** இலட்சம் நிதி உதவியாக அளிக்கப்பட்டுள்ளது.

**இணைப்பு–1**

**தலைமை அலுவலகம்**

| வ. எண் | ஒப்பிய பொறுப்பு | அணுக வேண்டிய அதிகாரி | அலுவலக விலாசம் |
|---|---|---|---|
| 1 | கைவினைஞர்களின் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு | விற்பனை மேலாளர் தொலைபேசி எண் **044 –28518716** | தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம். **759,** அண்ணா சாலை, சென்னை–**600 002** |
| 2 | பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகள் | உற்பத்தி மேலாளர் தொலைபேசி எண் **044 –28521271** | |

**இணைப்பு–2**

**(விற்பனை நிலையங்கள்)**

| வ. எண் | அணுக வேண்டிய அதிகாரி | அலுவலக விலாசம் |
|---|---|---|
| 1 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>108, அண்ணா சாலை<br>சென்னை 600 002<br>தொலைபேசி எண் 044 - 28520624 / 28550157 |
| 2 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>மேற்கு பொலிவார் சாலை, சிங்காரதோப்பு,<br>திருச்சி 620 008<br>தொலைபேசி எண் 0431– 2704895 |
| 3 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>மங்கம்மாள் சத்திர கட்டிடங்கள்<br>இரயில்வே சந்திப்பு எதிரில்,<br>12 மேற்கு வெளி வீதி,<br>மதுரை 625 001<br>தொலைபேசி எண் 0452–2340517 |
| 4 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>இரயில்வே ஸ்டேஷன் சாலை,<br>தஞ்சாவூர் 613 001<br>தொலைபேசி எண் 04362–230060 |
| 5 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>கடற்கரைச் சாலை,<br>மாமல்லபுரம் 603 104<br>தொலைபேசி எண் 044-27442224 |
| 6 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>அண்ணா பட்டு மாளிகை,<br>காதிகிராப்ட் பில்டிங்<br>திருவள்ளுவர் சிலை அருகில்<br>சேலம் 636 001<br>தொலைபேசி எண் 0427–2214767 |
| 7 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>874, பெரிய கடைவீதி,<br>கோயம்புத்தூர் 641 001<br>தொலைபேசி எண் 0422–2391055 |
| 8 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>1154, மேட்டூர் சாலை,<br>ஈரோடு 638 001<br>தொலைபேசி எண் 0424–2254885 |
| 9 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>123 சுப்புராய செட்டி தெரு,<br>கடலூர் 607 002 |

| | | |
|---|---|---|
| 10 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>பஞ்சாயத்து இல்லம், ஆபிசர்ஸ் லைன்<br>வேலூர் 632 001 |
| 11 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>கலைமகள் இல்லம், சன்னதி தெரு,<br>கன்னியாகுமரி 629 702<br>தொலைபேசி எண் 04652–246040 |
| 12 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>139, நெல்லையப்பர் நெடுஞ்சாலை,<br>திருநெல்வேலி 627 001<br>தொலைபேசி எண் 0462–233391 |
| 13 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>காதி கிராப்ட் பில்டிங், சேரிங் கிராஸ்,<br>ஊட்டி 643 001<br>தொலைபேசி எண் 0423–2442435 |
| 14 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>திருவலஞ்சுழி பிரதான சாலை<br>சுவாமிமலை – 612 302<br>தொலைபேசி எண் 0435–2454442 |
| 15 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>எண் 7, அண்ணா சாலை,<br>(டூரிஸ்ட் அலுவலக கட்டிடம்)<br>கொடைக்கானல் 624 101 |
| 16 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>104/105, பிரிகேட் சாலை,<br>பெங்களூரு - 560 001<br>தொலைபேசி எண் 080–25580582 |
| 17 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>சி–1, ஸ்டேட் எம்போரியா காம்ப்ளெக்ஸ்,<br>இர்வின் சாலை, பாபா கரக் சிங் மார்க்,<br>புதுடெல்லி 110 001<br>தொலைபேசி எண் 011–23363913 |
| 18 | மேலாளர் | பூம்புகார் விற்பனை நிலையம்<br>கடை எண் 21–22 முதல் தளம்,<br>சி.ஐ.டி ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்,<br>எண் 2 காரியாஉறாட் சாலை,<br>கொல்கத்தா 700 068<br>தொலைபேசி எண் 033–24237028 |

## இணைப்பு–3

## (உற்பத்தி நிலையம்)

| வ. எண் | அணுக வேண்டிய அதிகாரி | அலுவலக விலாசம் |
|---|---|---|
| 1 | கண்காணிப்பாளர் | பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கலப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>நாச்சியார் கோவில் 612 602<br>தஞ்சாவூர் மாவட்டம்<br>தொலைபேசி எண் 0435–2466553 |
| 2 | கண்காணிப்பாளர் | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>எண் 52, வடக்குத் தெரு,<br>சுவாமிமலை 612 302.<br>தஞ்சாவூர் மாவட்டம்<br>தொலைபேசி எண் 0435–2454442 |
| 3 | கண்காணிப்பாளர் | பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கலப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>வாகைக்குளம் 627 413<br>மன்னார் கோயில் அஞ்சல்,<br>அம்பாசமுத்திரம் (வழி)<br>திருநெல்வேலி மாவட்டம்<br>தொலைபேசி எண் 04634–250476 |
| 4 | கண்காணிப்பாளர் | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>ரயில்வே ஸ்டேஷன் சாலை,<br>தஞ்சாவூர் 613 001<br>தொலைபேசி எண் 04362–230107 |
| 5 | கண்காணிப்பாளர் | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>தொழிற்பேட்டை,<br>மதுரை 625 007.<br>தொலைபேசி எண் 0452–2566774 |
| 6 | கண்காணிப்பாளர் | பூம்புகார் சந்தன மரச்சிற்பங்கள் உற்பத்தி நிலையம்,<br>54–55 சிட்கோ தொழிற்பேட்டை,<br>கச்சிராப்பாளையம் சாலை,<br>கள்ளக்குறிச்சி 606 202.<br>தொலைபேசி எண் 04151–222508 |
| 7 | கண்காணிப்பாளர் | பூம்புகார் கற்சிற்ப நிலையம்,<br>கடற்கரைச் சாலை,<br>மாமல்லபுரம் 603 104.<br>தொலைபேசி எண் 044 - 27443224 |